# இலங்கை - நாடு தொடர்பான தகவல் பத்திரம் 2023

## 1. சுகாதார சேவை

### சுகாதார சேவை பற்றிய பொதுவான தகவல்கள்

இலங்கை பொது நிதியினால் பேணிவரப்படும் இலவச சுகாதார முறையினை கொண்டுள்ளதுடன் இச்சேவை இலவச சுகாதார கொள்கையொன்றின் மூலம் வழிநடாத்தப்படுகின்றது. மேற்படி பொது சுகாதார சேவை முறைமையானது அரச நிதி மற்றும் நிர்வாகத்தின் ஊடாக இயக்கப்படும் வைத்தியசாலைகளை கொண்டுள்ளதுடன் இந்த முறைமையானது 50% வெளிநோயாளர் சேவை, 90% வதிவிட நோயாளர்கள் சேவை மற்றும் அனைத்து நோய்த்தடுப்பு சேவைகளையும் சிகிச்சை தேவைகளையும் உள்ளடக்கியதாக இலவசமாக பேணி வரப்படுகின்றது.

இங்கையின் சுகாதார முறைமையானது மேற்கத்திய அலோபதி, ஆயுர்வேத, சித்த, யூனானி, குத்தூசி முறை மற்றும் இலங்கையின் பாரம்பரிய அறிவின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள சுதேச மருத்துவ முறைகள் போன்ற ஏனைய முறைகளையும் உள்ளடக்கியுள்ளது. இலங்கையின் சுகாதார சேவையானது அரச மற்றும் தனியார் ஆகிய இரண்டு துறைகளிலும் வழங்கப்படுவதுடன் இலாப நோக்கற்றதாக இயங்கும் நிறுவனங்கள் ஊடாக வரையறுக்கப்பட்ட சேவைகளும் வழங்கப்படுகின்றன. அலோபதி மற்றும் பாரம்பரிய சுகாதார சேவை முறைகள் சுகாதார அமைச்சினால் மேற்பார்வை செய்யப்படுவதுடன் கணிசமானளவு இலங்கையர்கள் அலோபதி முறையின் ஊடாகவும் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

தனியார் சுகாதார சேவையானது பொது சுகாதார சேவையுடன் சமாந்தரமாக செயற்படுவதுடன் குறிப்பாக வெளிநோயாளர் சேவை, வதிவிட சிகிச்சை, புனர்வாழ்வளிப்பு சிகிச்சை போன்ற சேவைகளை வழங்குகின்றது. தனியார் சுகாதார சேவையினை பெற்றுக்கொள்ளும் பொருட்டு சேவை பெறுநர்களினால் செலவிடப்படும் பணத்தின் மூலமாவும் தனிநபர் காப்புறுதி திட்டங்கள் மூலமாகவும் தனியார் சுகாதார சேவைக்கான நிதி கிடைக்கின்றது. இலங்கையில் தனியார் மருந்தகங்கள் மற்றும் ஆய்வுகூடங்கள் தனியார் வைத்தியசாலை வளவிற்குள்ளும் இவ்வைத்தியசாலைகளுக்கு வெளிவாரியாக இயங்கும் சுயாதீன நிறுவனங்களாகவும் செயற்படுகின்றன. தனியார் சுகாதார காப்புறுதி சந்தை கடந்த வருடத்தில் பெருமளவு வளர்ச்சி அடைந்துள்ளதுடன் காப்புறுதி வசதிகள் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ், அலியான்ஸ் ஸ்ரீலங்கா மற்றும் சொப்ட்லொஜிக் லயிப் போன்ற நிறுவனங்களினால் வழங்கப்படுகின்றன. நாடு திரும்புவோர் அனைத்து சந்தர்ப்பங்களிலும் இலங்கை பொது வைத்தியசாலைகளிலிருந்து இலவசமாக சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்பு உள்ளது.

### மருத்துவ வசதிகள் மற்றும் மருத்துவர்கள் கிடைத்தல்

இலங்கை முழுவதும் நகரங்களில் போலவே கிராமிய பிரதேசங்களிலும் மருத்துவ வசதிகள் உள்ளன. நாட்டில் 25 மாவட்டங்களையும் உள்வாங்கும் வகையில் இலங்கையில் 1054 அரச மருத்துவமனைகள் அமைந்துள்ளன. இது தொடர்பான மேலதிக விபரங்களை *http://www.health.gov.lk/moh_final/english/hospital_government.php?spid=24*. எனும் சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் வாயிலாக பெற்றுக்கொள்ளமுடியும். இலங்கையில் வதிவிட நோயாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்கக்கூடிய 141 தனியார் மருத்துவமனைகள் உள்ளன. தனியார் துறையின் சுகாதார சேவை பொது சுகாதார சேவையை போலல்லாமல் நோயாளர்களுக்கு வசதியான நேரங்களில் தங்களுக்கு தேவையான சேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதுடன் பொது சுகாதார சேவைகளை பெற்றுக் கொள்வதற்கு காத்திருப்பு பட்டியலில் இருக்க நேரிடுவது போல் காத்திருக்காமல் நோயாளர்களுக்கு விசேட முறையில் சிற்சில வசதிகளை பெற்றுக்கொள்ளக் கூடியவாறு தொழிற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக திரும்பி வருவோர் தங்களுக்கு விருப்பமான மருத்துவ நிபுணரை தெரிவு செய்து கொள்வதற்கான வாய்ப்பும் உள்ளதுடன் அவ்வாறான மருத்துவரின் ஆலோசனைக்கு அமைவாக தொடர்ச்சியாக சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு உள்ளது.

**மருத்துவமனைகளில் அனுமதித்தல்**

பொது சுகாதார சேவையின் கீழ் ஒரு நோயாளர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு ஒரு மருத்துவரை சந்தித்து பரிசோதனைகளை செய்துகொள்வதற்கு வருகை தர முடியும் என்பதுடன் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை மு.ப 7.30 மணி முதல் பி.ப 4.00 மணி வரையிலும் சனிக்கிழமைகளில் மு.ப 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையிலும் இச்சேவை கிடைக்கக்கூடியதாக இருக்கும். நோயாளரின் நிலை மற்றும் மருத்துவ பரிந்துரைகளுக்கு அமைவாக மேலதிக சிகிச்சைகளை அல்லது பரிசோதனைகளை மேற்கொள்ளும் பொருட்டு நோயாளர் வதிவிட சிகிச்சைக்காக ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு பரிந்துரைக்கப்படுகின்றது. அச்சந்தர்ப்பத்தில், மேற்படி நோயாளர் இலங்கைத் தேசிய அடையாள அட்டையை அல்லது வேறு ஏதேனும் அடையாள ஆவணத்தையும் வைத்தியரினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரை குறிப்பையும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். நோயாளர் சிகிச்சைக்காக தான் விரும்பும் அரசு மருத்துவமனையை தெரிவு செய்து கொள்வதற்கான சுதந்திரம் உள்ளதுடன் அரச மருத்துவமனைகள் நாடளாவிய ரீதியில் அமைந்திருப்பதால் வதிவிட சிகிச்சைக்காக அனேகமான சந்தர்ப்பங்களில் நோயாளர் அருகாமையில் உள்ள அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு தீர்மானிக்கிறார். மேலும் எவரேனும் ஒருவர் தனியார் வைத்தியசாலையிலிருந்து மருத்துவ வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கும் பட்சத்தில் அவ்விடத்திற்கு செல்வதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட மருத்துவமனையில் தான் விரும்பும் மருத்துவரைச் சந்திப்பதற்கு 'செனலின்' சேவையின் ஊடாக முன்கூட்டியே நேரத்தை ஒதுக்கி கொள்ளுதல் வேண்டும். பின்னர் அந்நபரின் சுகாதார நிலையின் அடிப்படையில் தேவையாயின் அந்த மருத்துவமனையில் வதிவிட சிகிச்சை பெறுவதற்கு மருத்துவமனையில் தங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது. அவ்வாறு தங்கி சிகிச்சை பெறுவதற்கு அடையாள ஆவணமும் (தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் அல்லது கடவுச்சீட்டு) மருத்துவரின் பரிந்துரை குறிப்பும் இருக்க வேண்டும் என்பதுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதற்கும் சிகிச்சைக்கும் தேவையான செலவுகளை ஈடு செய்வதற்கு போதியளவு பணவசதியையும் கொண்டிருத்தல் வேண்டும்.

**மருந்துகளின் கிடைக்கக்கூடிய தன்மை மற்றும் செலவு**

இலங்கையில் இலவச மற்றும் பொது சுகாதார சேவையொன்று பின்பற்றப்படுவதால் அரசத்துறை மருத்துவ நிலையங்களிலிருந்து இலவசமாக மருந்துகளை பெற்றுக்கொள்ளமுடியும். எவ்வாறாயினும், பரிந்துரைக்கப்பட்ட சில மருந்து வகைகள் அல்லது சிகிச்சைகளை பெற்றுக் கொள்ள இயலாவிடின் நோயாளர்கள் தனியார் மருந்தகங்களிலிருந்து தங்களின் சொந்த செலவில் மருந்துகளை வாங்குவதற்கு அல்லது அத்தகைய சிகிச்சைகளை தனியார் மருத்துவ நிலையங்களிலிருந்து பெற்றுக் கொள்ள இயலுமாயின் அவ்வாறு பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக, நோயாளர் தனியார் சுகாதார சேவை நிலையமொன்றின் மருத்துவர் ஒருவரிடமிருந்து மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கும் பட்சத்தில் மருந்து வகைகள், சிகிச்சைகள் மற்றும் ஏனைய பரிசோதனைகளுக்கு ஏற்படும் செலவுகளை அந்நபர் பொறுப்பேற்க வேண்டும்.

(குறிப்பு[1]: 2022 ஆம் ஆண்டின் தொடக்கம் முதல் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக இலங்கையில் அத்தியாவசிய மருந்து பொருட்களுக்கு பெருமளவு தட்டுப்பாடு நிலவுகின்றது. மேலும், இறக்குமதி தாமதங்கள் மற்றும் சிகிச்சைகளுக்கு ஏற்படும் செலவுகள் உள்ளிட்டதாக செலவுகளில் பாரிய அதிகரிப்பினை காணக்கூடியதாக உள்ளது. தனிநபர் சுகாதார காப்புறுதியை கொண்டிருக்கவில்லையாயின் தனியார் சுகாதார சேவை நிலையத்திலிருந்து மருந்துகளை வாங்குவதற்கு அந்நபர் விரும்புவாராயின் அதற்கான செலவினை தானே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் கணிசமானளவு பணத் தொகையினை செலவு செய்ய நேரிடும்)

**கொவிட்-19 பற்றிய பொதுவான தகவல்கள்**

கோவிட்-19 தொற்றுநோய் 2023 ஆம் ஆண்டளவில் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. டிசம்பர் 2022 இன் இறுதியில் குறைவான எண்ணிக்கையிலான நோயாளர்களும பூஜ்ஜிய இறப்புக்களும் பதிவாகியுள்ளன.

இருப்பினும் தொற்றுநோய் காலத்தில் உலக சுகாதார அமைப்பு இலங்கை சுகாதார அமைச்சின் ஒத்துழைப்புடன் பெருமளவு தகவல்கள் அடங்கிய ஆவணங்களை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரித்துள்ளது. சுகாதார அமைச்சின் கீழ் தொழிற்படும் சுகாதார மேம்பாட்டு பணியகம் இலங்கையின் புதிய தொற்றாளர்கள், மரணமடைந்தவர்கள், குணமடைந்தவர்கள்

[1] 2022 ஏப்பிரல் 20 ஆம் திகதிய நிலவரப்படி

ஆகியோர் தொடர்பான புள்ளிவிபரங்களுடன் இலங்கையின் உண்மையான நிலை தொடர்பான நாளாந்த பகுப்பாய்வினை வெளியிடுகின்றது. சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் *https://www.hpb.health.gov.lk/en/covid-19* இணையத்தளத்தில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் கொவிட்-19 தொடர்பான செயற்பாடுகளும் உள்ளடங்குகின்றன. மேலும், இந்த இணையதளத்தில் இத்தொற்றினை தடுப்பதற்கான நடவடிக்கைகள், விசேட தேவையுடையவர்களுக்கான ஆலோசனைகள், கொவிட்-19 சார்ந்த சேவைகளுக்காக காணப்படும் வைத்தியசாலைகள் மற்றும் ஆய்வுகூடங்கள் தொடர்பான தகவல்கள் அத்துடன் பொதுமக்களுக்கான ஏனைய தகவல்களும் பொதுமக்கள் தங்களையும் பிறரையும் எவ்வாறு பாதுகாத்துக்கொள்ளலாம் என்பதைப் பற்றிய தகவல்களும் உள்ளடங்குகின்றன. மேலும், சுகாதார அமைச்சு கொவிட்-19 நோய் அறிகுறிகள் தொடர்பாக பொதுமக்களுக்கு இலவசமாக மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கு 1390 என்ற தொலைபேசி இலக்கத்தை நிறுவியுள்ளது. 2022 ஏப்ரல் மாதம் முதலாம் திகதியில் சனத்தொகையில் 65.6% வீதமானவர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி முழுமையாக வழங்கப்பட்டுள்ளதுடன் 39.1 மில்லியன் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்படி தடுப்பூசியை தமது வீட்டுக்கு அருகாமையில் உள்ள பொது சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதுடன் இலங்கையில் வாழும் புலம்பெயர்ந்தவர்களுக்கும் இந்த நடைமுறையை பின்பற்ற முடியும்.

இலங்கைக்கு பயணிக்கும் முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ள உல்லாசப் பிரயாணிகள் புறப்படுவதற்கு முன்னர் செய்து கொள்ளவேண்டிய கொவிட்-19 பரிசோதனையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதுடன் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுதலும் அவசியமற்றதாகும். தடுப்பூசி முழுமையாக பெற்றுக்கொள்ளப்படாவிடின் உல்லாசப் பிரயாணிகள் புறப்படுவதற்கு முன்னர் கொவிட்-19 பரிசோதனை முடிவுகளை சமர்ப்பித்து இலங்கையில் ஒரே நாளில் செய்யப்படும் பீசீஆர் பரிசோதனைக்கு உள்ளாகுதல் வேண்டும்.

MOH வழங்கிய சமீபத்திய வழிகாட்டுதல்களிக்படி எந்தவொரு விமான நிலையம் அல்லது கடல் துறைமுகம் வழியாக இலங்கைக்கு வரும் எந்தவொரு நபரும் கோவிட்-19 தடுப்பூசி சான்றிதழை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை. மேலும் விமான நிலையம் அல்லது கடல் துறைமுகம் வழியாக இலங்கைக்கு வரும் எந்தவொரு நபரும் விமானத்தில் ஏறுவதற்கு முன் அல்லது வருகையில் எதிர்மறையான கோவிட்-19 சோதனையை (PCR/RAT) பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.

**திரும்பி வருவோருக்கான வாய்ப்புகள்**

**தகைமைகளும் தேவைப்பாடுகளும்:** எந்தவொரு இலங்கையருக்கும் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள மருத்துவமனைகளில் சுகாதார வசதிகளை இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும். பொது சுகாதார சேவை முறைமையலிருந்து வெளிவாரி நோயாளராகவும் வதிவிட நோயாளராகவும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வித காப்புறுதியும் அவசியமற்றதாகும். திரும்பி வருவோர் நேரடியாகவே தான் விரும்பும் மருத்துவமனைக்குச் சென்று அவர்களுக்கு தேவையான சிகிச்சைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியும். திரும்பி வருவோர் தனியார் சுகாதார பாதுகாப்பு காப்புறுதியொன்றை பெற்றுக் கொள்ள விரும்புவார்களாயின் அவர்கள் சுகாதார காப்புறுதி திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ள காப்புறுதி நிறுவனம் ஒன்றின் கீழ் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பதுடன் நிபந்தனைகள் நிறுவனத்திற்கேற்ப வேறுபடக் கூடும்.

**பதிவு செய்து கொள்வதற்கான நடைமுறை:** பொது சுகாதார சேவை முறைமையின் கீழ் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு திரும்பி வருவோர் எவ்விடத்திலும் பதிவு செய்து கொள்ள தேவைப்பட மாட்டாது. தனியார் காப்புறுதி கம்பெனிகள் நாடளாவிய ரீதியில் அனேகமாக எல்லா மாவட்டங்களிலும் தங்களது கிளைகளை நிறுவியுள்ளதுடன் பதிவு செய்து கொள்வதற்கான நடைமுறை நிறுவனத்திற்கேற்ப வேறுபடக் கூடும். மிகவும் பிரபல்யமான சில தனியார் காப்புறுதி கம்பெனிகளின் பெயர்கள் மேலே தரப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நடைமுறை, தேவைப்பாடுகள் மற்றும் கட்டணங்கள் இந்நிறுவனங்களின் இணையத்தளங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**தேவையான ஆவணங்கள்**: ஒரு மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு அல்லது சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு மற்றும் மருத்துவ அறிக்கைகள் அவசியமாகும்.

## 2. ஊழியச் சந்தை

**ஊழியச் சந்தை பற்றிய பொதுவான தகவல்கள்**

2021ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகை *22.16* மில்லியன்களாக இருந்ததுடன் 2019 இல் 8.592 மில்லியனாக இருந்த இலங்கையின் ஊழியப் படை 2020 இல் 8.467 மில்லியன் வரை வீழ்ச்சியடைந்தது. இதற்கமைவாக 202*1*இல் பொருளாதார ரீதியில் நாட்டின் செயலற்ற சனத்தொகை *51.2 %* மில்லியன் வரை அதிகரித்தது. கொவிட்-19 தொற்று பரவியதையடுத்து காணப்பட்ட வரையறைகள், தொழில் வாய்ப்புகள் குறைவடைதல் மற்றும் கொவிட்-19 பரவல் காரணமாக நிலவிய சுகாதார ஆபத்து நிலை போன்றவையின் விளைவாக அனேகமானோர் தொழிலை இழந்ததால் இந்நிலை ஏற்பட்டது. ஆண் ஊழியர் படையின் பங்கேற்பு வீதம் (LFPR) 71.9% வரை வீழ்ச்சியடைந்ததுடன் பெண் ஊழியர் படையின் பங்கேற்பு வீதம் 32.1% வரை வீழ்ச்சியடைந்தது. கொவிட்-19 பூகோளத்தொற்று ஊழியர் படையின் பால்நிலையின் சமநிலையற்ற தன்மையை மேலும் தீவிரப்படுத்தியது. 2020 ஆம் ஆண்டில் தொழிலில் ஈடுபட்ட மக்கள் தொகை 7.99 மில்லியன் வரை குறைவடைந்ததுடன் தற்காலிக மற்றும் அமய சேவை பிரிவுகளில் தெளிவானதொரு வீழ்ச்சியினை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. 2020 இன் மூன்றாம் காலாண்டில் தொழிலின்மை வீதம் 5.8% வரை அதிகரித்துள்ளது. கொவிட்-19 காரணமாக விதிக்கப்பட்டிருந்த இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் உணவு வழங்கலில் ஏற்பட்டிருந்த தடைகள் காரணமாக உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு விவசாயத்துறையில் தொழில் வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் முதன்மையான துறையாகிய கைத்தொழில் மற்றும் சேவை துறைகள் 2020 ஆம் ஆண்டில் 26.9% வரை வீழ்ச்சியடைந்தது. பூகோளத்தொற்றின் காரணமாக ஏற்பட்ட புதிய கேள்விகளின் விளைவாக தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை (PPE) உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள், விநியோக ஊழியர்கள் போன்ற புதிய தொழில் வாய்ப்புகள் தோற்றம் பெற்றன. 2020 ஆம் ஆண்டில் இலங்கையின் தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் முதன்மை துறையாக தனியார் துறை இருந்தது. தொழில் வாய்ப்புகளை உருவாக்கியுள்ள முக்கியமான துறைகளாக விவசாயம், உற்பத்தி, கட்டுமானம், சுரங்க அகழ்வு, கல் உடைத்தல் மற்றும் பொது பயன்பாடு ஆகியவை காணப்படுகின்றன. 2020 இல் இலங்கையின் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி ஐக்கிய அமெரிக்க டொலர் 4052.75 அறிக்கையிடப்பட்டதுடன் இது உலக சராசரியின் 32 வீதத்திற்கு சமமானதாகும். தற்போது இலங்கை பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இலங்கையின் ரூபா பெறுமதி வீழ்ச்சி அடைந்துள்ளதுடன் இது அனேகமான தொழில்கள் மற்றும் துறைகள் மீது பாதகமான தாக்கத்தை தோற்றுவித்துள்ளது.

**வேலைவாய்ப்புகளை தேடிக் கொள்ளுதல்**

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை தேடிக் கொள்வதற்கு மக்கள் அக்கறை காட்டுவார்களாயின் அவர்களுக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்திற்கு (SLBFE) சென்று அனுமதிப்பத்திரம் பெற்ற ஆட்சேர்ப்பு முகவர்கள் ஊடாக தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளமுடியும். மேலதிக விபரங்களை *http://www.slbfe.lk/* ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

உள்நாட்டு தொழில் வாய்ப்புகள் இணையத்தளங்களிலும், பத்திரிகைகளிலும், செயலிகள் ஊடாகவும் பிரசுரிக்கப்படுவதுடன் பின்வரும் இணையத் தொடர்புகள் உள்ளிட்ட சமூக ஊடகங்களிலும் பகிரங்கப் படுத்தப்படுகின்றது.

- **https://topjobs.lk/**
- **https://xpress.jobs/**
- **https://www.careerfirst.lk/**
- **https://www.dreamjobs.lk/**

**தொழிலின்மையை இல்லாதொழிப்பதற்கு உதவி வழங்குதல்**

இலங்கை தொழில்சார் வழிகாட்டல் நிறுவனம் தொழிலின்மையை குறைப்பதற்காக நாடளாவிய ரீதியில் 13 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகளுக்கு தொழில்சார் வழிகாட்டல் சேவையினை வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம் இளைஞர்களுக்கு தொழில் தெரிவு, தொழில் மாற்றம் தொழிலை திட்டமிடுதல் போன்ற விடயங்களுக்கு உதவிகளை வழங்குகின்றது. நிறுவனத்துடன் தொடர்பு கொள்வதற்கான சம்பந்தப்பட்ட தகவல்கள் இணைய

பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் மேலதிக விபரங்களை http://slicg.gov.lk/slicg/ என்ற இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளமுடியும். இலங்கையில் மக்கள் தொழிலை இழக்கும் சந்தர்ப்பத்தில் செயற்படும் தொழில் நலன் திட்டங்கள் காணப்படுவதில்லை. எவ்வாறாயினும், வறிய மற்றும் தொழிலற்றவர்களை கவனத்திற் கொண்டு அரசாங்கம் சமுர்த்தி எனும் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தினை ஆரம்பித்துள்ளதுடன் இதன் கீழ் தகைமை பெறுகின்ற குடும்பங்களுக்கு உணவு முத்திரை மற்றும் வணிக உதவிகளுக்கு கடன் வழங்குதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் பயன் பெறுவதற்கான தகைமை இலங்கையில் வறுமைக்கோட்டின் கீழுள்ள நபர்களுக்கு மாத்திரமே கிடைக்கின்றது. மீளதிரும்புவோர் https://www.samurdhi.gov.lk/ ஊடாக இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளமுடியும். ஒட்டுமொத்தமாக நோக்குகையில் திறன் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் வாய்ப்புகளைத் தேடி கொள்ளுதல் தனிநபரின் பொறுப்பாகும்.

**மேலதிக கல்வி மற்றும் பயிற்சி**
உயர் கல்வியினை பெறுவதற்கு அரசு பல்கலைக்கழகங்களும் தனியார் பல்கலைக்கழகங்களும் உள்ளன. கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுகின்ற மாணவர்களுக்கு மாத்திரம் அரச பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வதற்கு அனுமதி கிடைக்கின்றது. தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கு மாணவர் ஒருவர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் அல்லது கல்விப் பொதுத் தராதர உயர் தரம் அல்லது சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேறு ஏதேனும் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட தனியார் பல்கலைக்கழகங்களின் பட்டியலை பின்வரும் தளத்தில் காண்க.
*https://www.mohe.gov.lk/index.php?option=com_content&view=article&id=117&Itemid=206&lang=en.*

தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வித் துறையானது பிரயோக துறைகளில் இளமானி பட்டப்படிப்புக்கான குறுங்கால சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிலுனர் பயிற்சியினை வழங்குகின்றது. இந்நிறுவனனங்கள் தேசிய தொழில்சார் தகைமை சட்டகத்தின்(NVQF) கீழ் தேசிய சான்றிதழ்கள், தேசிய டிப்ளோமா மற்றும் மட்டம் 7 இளமானி பட்டங்களை வழங்குகின்றன. அவை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களால் வழங்கப்படுவதுடன் பதிவு மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பான மேலதிக விபரங்களை பின்வரும் இணைப்புகள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் *(DTET)- http://dtet.gov.lk/en/*
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழு *(TVEC) – https://www.tvec.gov.lk/*
தொழில் பயிற்சி அதிகாரசபை *(VTA) – https://wenr.wes.org/2017/08/education-in-sri-lanka*
தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை *(NAITA) – http://www.naita.gov.lk/*
இலங்கை ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் *(CGTTI) – http://www.cgtti.lk/*
இலங்கை திறந்த பல்கலைக்கழகம் *(OUSL) – https://ou.ac.lk/*
தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் *(UoVT) – http://univotec.ac.lk/*

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரிட்சையில் சித்தியடைந்த 17 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் இதன் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்கான தகைமையை பெறுவதுடன் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் கீழ் நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் அனேகமான பாடங்களுக்கு 29 வயது எனும் வரையறை உள்ளது. பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பாடநெறிகளை கற்பதற்கு பயிலுனர்கள் 9 வருடகால பாடசாலைக் கல்வியினை பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்பதுடன் தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபையின் (NAITA) கீழுள்ள அநேகமான பாடநெறிகளை கற்பதற்கு கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல் வேண்டுமெனினும் எட்டாம் தரத்தை பூர்த்தி செய்த பயிலுனர்களுக்கும் திறந்த பாடநெறிகள் உள்ளன. நாடு திரும்பியோர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக மீண்டும் புலம்பெயர்வதற்கு எதிர்பார்ப்பார்களாயின் அவர்களுக்கு குறைந்தபட்சம் 3ஆம் மட்ட தேசிய தொழிற் தகைமையாகிய சான்றிதழ் (NVQ III) இருத்தல் வேண்டும். NVQ மட்டங்கள் 7 வரை காணப்படுவதுடன் NVQ மட்டம் VII ஆனது பட்டப்படிப்புக்கு சமானமாகும்.

**மீள்திரும்புவோருவக்கான வாய்ப்புகள்**
**தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள்:** வயதெல்லை மற்றும் கல்வித் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டால் திரும்பி வருவோர் வர்த்தகம், கைத்தொழில், உற்பத்தி துறைகள் அல்லது தொழில்முயற்சி சார்ந்த தொழிலை பெற்றுக்கொள்வதற்கு, மேலதிக பயிற்சி மற்றும் தகைமைகளை பெற்றுக்கொள்வதற்கு கைத்தொழில் மற்றும் தொழில்சார் கல்வித் துறையின் பாடநெறிகளில் இணைந்து கொள்ளுதல் வேண்டும். பல்வேறு விடயப் பரப்புகள் தொடர்பாக தொழில்சார் / பயிற்சி பாடநெறிகளை வழங்கும் 6 தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி பயிற்சி நிறுவனங்கள் உள்ளன. திரும்பி

வருவோருக்கு இந்நிறுவனங்களின் இணையத்தளங்களில் (மேலதிக கல்வி மற்றும் பயிற்சியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது) பிரவேசித்து பொருத்தமான தொழில்சார் பாடநெறியொன்றை தெரிவு செய்துகொள்ள முடியும். முன் கற்றல் அங்கீகாரம் (Recognition of Prior Learning-RPL) என்பது அவர்களின் திறன்கள் மற்றும் கடந்தகால தொழில் அனுபவத்தை வெளிப்படுத்தும் NVQ சான்றிதழைப் பெறுவதற்கான ஒரு வழிமுறையாகும். முன் தொழில் அனுபவம் உள்ள திரும்பி வருவோருக்கு தேசிய தொழில்சார் தகைமை சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு பாடநெறியொன்றை கற்பதற்கு அவசியமில்லை என்பதுடன் அதற்கு பதிலாக அவர்கள் தங்களது துறை சார்ந்த அனுபவம் தொடர்பாக நடைமுறை பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். தேர்ச்சி மற்றும் திறன் அடிப்படையில் தேசிய தொழில்சார் தகைமை நிலை வழங்கப்படுவதுடன் திரும்பி வருவோரின் துறைக்கு அமைவாக ரூபா 7000 - ரூபா 150000 இற்கும் இடைப்பட்ட தொகையினை செலவிட நேரிடும். NAITA, DTET, மற்றும் VTA ஆகியவற்றிலிருந்து முன் அனுபவ சான்றிதழை பெற்றுக்கொள்ள இயலுமெனினும் மேற்படி சான்றிதழை வழங்கும் முதன்மை நிறுவனம் NAITA ஆகும்.

**பதிவு நடைமுறை**: திரும்பி வருவோர் பதிவு செய்து கொள்வதற்கு தொழிலின்மையை இல்லாதொழிப்பதற்கான எந்தவொரு உதவி நிகழ்ச்சித் திட்டங்களும் இல்லையெனினும் வறுமையை இல்லாதொழிப்பதற்கான சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு தகைமை பெறுவதற்கான வாய்ப்பினை சம்பந்தப்பட்ட கிராம அலுவலரிடம் ஆராய்ந்து அறிந்துகொள்ளலாம். இதற்கு மேலதிகமாக வேலைவாய்ப்புகளை தேடுதல், தொழில்சார் திட்டமிடல் மற்றும் மிகச்சிறந்த தொழில் வாய்ப்பினை தெரிவு செய்தல் போன்றவற்றிற்கான ஆலோசனைகளை இலங்கை தொழில்சார் வழிகாட்டல் நிறுவனத்திடமிருந்து (*Sri Lanka Institute of Career Guidance*) அறிந்து கொள்ள முடியும். இந்நிறுவனம் 13 முதல் 25 வயது வரையிலான இளைஞர்களுக்கு மாத்திரம் சேவையினை வழங்குகின்றதெனினும் ஒரு விதிவிலக்காக 35 வயது வரையிலான நபர்களுக்கும் சேவையினை வழங்குகின்றது.

**தேவையான ஆவணங்கள்:** ஒரு தொழிலை தேடும்போது, அடையாள ஆவணம், கல்வித் தகைமை மற்றும் தொழில் அனுபவத்தை உறுதி செய்வதற்கான ஆவணம் மற்றும் மீண்டும் தொழிலை ஆரம்பித்தல் சார்ந்த கடிதம் ஆகியவற்றை வைத்திருத்தல் வேண்டும்.

## 3. வீடமைப்பு

### வீடமைப்பு பற்றிய பொதுவான தகவல்கள்

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் 2016[2] ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட வீட்டுத் தேவை தொடர்பான மதிப்பாய்வுக்கு அமைவாக இலங்கையில் வாழும் 6 மில்லியன் குடும்பங்களில் 5.2 மில்லியன் குடும்பங்களுக்கு மாத்திரம் ஏதேனும் ஒரு வகையிலான வீட்டுவசதி உள்ளது. போதுமான மற்றும் தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் வீடுகளை வழங்குதல் இலங்கை வீடமைப்புத் துறையின் முக்கியமான பிரச்சினையாகும். இப்பிரச்சினையை குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களும், இலங்கையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சமுதாயங்கள், இடர் நிலை ஏற்படக் கூடிய இடங்களில் வாழும் மக்கள் மற்றும் நகர்ப்புறத்திற்கு இடம்பெயர்ந்துள்ள நடுத்தர வருமானம் பெருபவர்கள் அதிகமாக எதிர்கொள்கின்றனர். நிதி பிரச்சினைகள் மற்றும் முறைசாரா தொழில் வாய்ப்புகள் காரணமாக வீடமைப்பு கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு 20% வீதமானவர்களுக்கு மாத்திரமே வாய்ப்பு கிட்டுகின்றது. நகர்புறத்தை சேர்ந்த குடும்பங்களில் சுமார் 88% வீதமானவர்கள் தனி வீடுகளில் வாழ்வதுடன் 30.6% பெருந்தோட்டத்துறையில் தனி வீடுகளில் அல்லது வரிசை வீடுகளில் அல்லது இரட்டை வீடுகளில் வாழ்வதுடன் ஒரே வீட்டில் அதிக எண்ணிக்கையிலான அங்கத்தவர்கள் வாழ்கின்றனர். நகர்ப்புறங்களில் தனி வீடுகள் அதிகமாக காணப்படுவதுடன் அதிகரிக்கும் வாடகை மற்றும் அதைச் சார்ந்த செலவுகள் காரணமாக பலர் தங்குமிட வசதிகளை பகிர்ந்து கொண்டு வாழ்வதற்கு விரும்புகின்றனர். வீட்டிலுள்ள அறைகளின் எண்ணிக்கை, வீடு அமைந்துள்ள இடம் மற்றும் வழங்கப்பட்டுள்ள வசதிகள் ஆகியவற்றில் அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், நகர்ப்புறங்களில் இரண்டு அறைகளை கொண்ட வீட்டின் சராசரி வாடகை ரூ.35,000/- ஆக இருப்பதுடன் கிராமிய பிரதேசங்களில் இவ்வாறானதொரு வீட்டின் வாடகை சுமார் ரூ.20,000/- ஆகும். பயன்பாட்டு கட்டணங்கள் அத்தகைய வசதிகள் பயன்படுத்துகின்ற அளவின் அடிப்படையில் அறவிடப்படுவதுடன் நீர் மற்றும் மின்சாரத்திற்கு சராசரியாக ரூ.4,000/- ஒதுக்க வேண்டும். நகர்ப்புறங்களில் அதிக தொழில் வாய்ப்புகள் காணப்படுவதால் நகர்புறங்களில் வீடுகள் மற்றும் ஏனைய ஆதனங்களுக்கான வாடகை அதிகரித்துள்ளது. தனக்கென்று ஒரு சொந்த வீட்டை அமைத்துக் கொள்வதற்கு மிக அதிகமான செலவு ஏற்படுவதால் பெரும்பாலானோர் நகர்ப்புற மற்றும் கிராமிய

[2] வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு – (2016) – வீ:ட்டுத் தேவைகள் பற்றிய மதிப்பீடு மற்றும் தரவு மதிப்பாய்வு, வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

பிரதேசங்களில் வாடகை வீடுகளில் வசிக்க விரும்புகின்றனர்.

**தங்குமிடத்தை தேடிக் கொள்ளுதல்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை இலங்கையில் வீட்டுவசதி தொடர்பான பிரச்சனைகளை எதிர்நோக்கும் சமுதாயங்களுக்கு உதவி வழங்குகின்றது. குறிப்பாக பெருந்தோட்டங்களில் வரிசை வீடுகளில் வாழும் ஏழைக் குடும்பங்கள், கிராமிய குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் மற்றும் நிரந்தர வீடு அல்லது நிரந்தர வருமானம் வழிவகை இல்லாத நகர்புற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் ஆகியவற்றிற்கு இந்த அதிகார சபை உதவி வழங்குகின்றது. நகர அபிவிருத்தி அதிகார சபை கொழும்பு மாநகர பிரதேசம், கண்டி, இரத்தினபுரி, அனுராதபுரம் மற்றும் அனேகமாக மட்டுப்படுத்தப்பட்ட வகையிலும் மிகக் கூடிய விலையினையும் கொண்ட இடங்களில் உள்ள ஏனைய நகர்ப்புற பிரதேசங்களிலும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் வீடமைப்பு உதவிகளை வழங்கிவருகின்றது. வாடகைக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய அடுக்குமாடி வீடுகள் மற்றும் ஏனைய வீடுகள் தொடர்பாக பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரங்கள் தொடர்பான தகவல்களை பத்திரிகைகள் வாயிலாகவும் பின்வரும் இணையத்தளங்களின் வாயிலாகவும் பெற்றுக் கொள்ள முடியும்.

- https://ikman.lk/en/ads/sri-lanka/house-rentals
- https://www.patpat.lk/property/house
- https://www.lankapropertyweb.com/rentals/index.php

**வீட்டு வசதிக்கான சமூக மானியங்கள்**

இலங்கையில் வீட்டு வசதிக்கான சமூக மானியங்கள் கிடைப்பதில்லை. வங்கிகளிலிருந்து வீடமைப்பு கடனைப் பெற்றுக் கொள்ளுதல் சிரமமான விடயமாக இருப்பதால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை *(NHDA)* குறைந்த மற்றும் கீழ் நடுத்தர வருமானமுடைய குடும்பங்களுக்கு ரூ.500,000 வீடமைப்புக் கடனை வழங்குகின்றது. இக் கடன் தொகையை பெற்றுக் கொள்வதற்கு குடும்பத்தின் மாத வருமானம் ரூ.45,000.00 இருக்க வேண்டும் என்பதுடன் 55 வயதுக்கும் குறைவானவர்களாக இருத்தல் வேண்டும். உண்மையான வீட்டு தேவையையும் தயார் நிலையும் வீடமைப்புக்கு பொருத்தமான காணியும் இருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்தில் அல்லது பிரதேச செயலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள வீடமைப்பு உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். இதற்கு காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள், வருமானச் சான்றிதழ், உள்ளூராட்சி நிறுவனத்தினால் அனுமதி வழங்கப்பட்ட வரைபடம், பிணையாளர்களின் கூற்று மற்றும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தேவைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு *https://www.nhda.lk/index.php/en/about-usa/introduction*. இணையத்தளத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**மீளதிரும்புவோருக்குகான வாய்ப்புகள், தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள்**

**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் (SLBFE)** பதிவு செய்து கொண்டுள்ளவர்களாகவும் இடர் நிலைக்கு உள்ளாகக் கூடியவர்களாவும் உள்ள திரும்பி வருவோருக்கு தற்காலிக தங்குமிட வசதிகள் வழங்கப்படுகின்றன. இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் "சஹன பியச" நலன்புரி நிலையம் நடாத்தப்படுவதுடன் அது கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது.

அனேகமாக தங்குமிட வசதிகள் மோதல்கள் / இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இன்னலுக்கு உள்ளாகியவர்கள் அல்லது வீட்டு வன்முறைக்கு உள்ளாகியவர்களுக்கு வழங்கப்படுவதுடன் அவை பொதுவாக பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்தினால் நடாத்தப்படுகின்றன.

**பதிவு நடைமுறை**: இலங்கையில் சமூக வீடமைப்பு திட்டங்கள் எதுவும் இல்லை.

## 4. சமூக நலனோம்புகை

### சமூக நலனோம்புகை முறைமை

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சில சமூக நலனோம்புகை நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளன. அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற சமூர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் வாயிலாக குடும்பங்களுக்கான உணவு முத்திரை, சேமிப்பு மற்றும் கடன் திட்டங்கள், தொழில் முயற்சி மற்றும் வணிக அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட கடன், சமுதாய உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல், நிதி உதவிகளை வழங்குதல், சமூக பாதுகாப்பு நிதியம் மற்றும் போஷாக்கு நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்களாக நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக தகைமை பெறுபவர்களுக்கு மாத்திரம் உதவி வழங்கப்படுகின்றது. பாடநூல்கள், சீருடை மற்றும் புலமைப்பரிசில் போன்றவற்றை

வழங்கும் கொள்கைக்கு அமைவாக இலங்கையில் பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வியினை வழங்குகின்றது. இதற்கு மேலதிகமாக, அனைத்து பிரசைகளுக்கும் இலவச சுகாதார சேவை வழங்குகின்ற பொது சுகாதார சேவை முறைமையொன்றும் இலங்கையில் உள்ளது. சிறுவர்கள், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் வயோதிபர்களுக்கு சமூக நலனோம்புகை சேவைகளை வழங்கும் பல்வேறு அரச சார்பற்ற அமைப்புகளும் மத நிறுவனங்களும் உள்ளன.

**மீள்திரும்புவோருக்கான வாய்ப்புகள்**
**தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள்:**

சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாத்திரம் உதவி வழங்குவதுடன் அதற்கான தகைமைகளை கிராம அலுவலரிடம் வினவி அறிந்துகொள்ளமுடியும். மேலதிக விபரங்களை https://www.samurdhi.gov.lk/web/index.php?lang=en. ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

**பதிவு நடைமுறை:** நிகழ்ச்சித் திட்டத்திற்கு பதிவு செய்துகொள்ளுதல் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் அதிகாரிகள், மற்றும் திரும்பி வருவோரின் நிதி பின்னணியை மதிப்பீடு செய்யும் கிராம அலுவலர் ஆகியோரினால் தீர்மானிக்கப்படுகின்ற திரும்பி வருவோரின் தகைமையில் தங்கியிருக்கின்றது.

**தேவையான ஆவணங்கள்**: வருமானத்தை உறுதி செய்வதற்காக கிராம அலுவலரினால் விநியோகிக்கப்பட்ட சான்றிதழ்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் இலங்கையில் இருந்து வெளிநாட்டுக்கு செல்வதற்கு முன்னர் அப்பணியகத்தில் பதிவு செய்து கொண்டுள்ள புலம்பெயர்பவகளுக்கு நலனோம்புகை திட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளது. மேலதிக விபரங்களுக்கு *http://www.slbfe.lk/page.php?LID=1&MID=39* ) இணையத் தளத்தை பார்வையிடுவதன் மூலம் அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின்1989 நேரடி தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளமுடியும்.

**ஓய்வூதிய திட்டம்**
ஓய்வூதிய திட்டமானது அரச மற்றும் தனியார் துறை ஊழியர்களுக்கு மாத்திரம் காணப்படும் ஒரு திட்டமாகும். அரச துறை ஊழியர்களுக்கு மாதாந்த அடிப்படையில் செலுத்தப்படுகின்ற ஓய்வூதிய கொடுப்பனவு கிடைப்பதுடன் தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் *(ETF)* கீழ் இடைக்கால நன்மைகளையும் ஊழியர் சேமலாப நிதியத்தின் *(EPF)* கீழ் ஓய்வூதிய நன்மையை பெறுவதற்கும் வாய்ப்பு கிட்டுகின்றது. தனியார் துறையில் ஒரு தொழில் தருநரின் கீழ் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட காலம் தொடர்ச்சியாக பணியாற்றியுள்ள ஊழியர்களுக்கு பணிக்கொடையைப் பெற்றுக் கொள்வதற்கும் தகைமை கிடைக்கின்றது. பொது நிர்வாக அமைச்சின் அறிவித்தலின் பிரகாரம் 2022 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அரச ஊழியர் ஒருவரின் கட்டாய இளைப்பாறல் வயது 55 வயது வரை உயர்த்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அரச ஊழியர்களுக்கு தேவையாயின் 60 வயதை பூர்த்தி செய்த பின்னர் ஓய்வு பெறுவதற்கு சுதந்திரம் உள்ளது. குறைந்தபட்சம் பத்து வருட சேவைக் காலம் உள்ளதாயின் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கு ஊழியர்களுக்கு உரித்துள்ளது. ஓய்வு பெறும் ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு சம்பந்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து ஓய்வூதிய திணைக்களத்துக்கு அனுப்பி வைப்பதன் மூலம் மேற்படி நன்மைகளை பெற்றுக்கொள்ளமுடியும் என்பதுடன் ஓய்வூதியதாரரின் மரணத்தின் பின்னர் ஓய்வூதியதாரரின் விதவைக்கும் 26 வயதுக்கும் குறைந்த வேலையற்ற திருமணமாகாத பிள்ளைகளுக்கும் நன்மைகளை வழங்குமாறு கோருவதற்கான உரிமை உள்ளது. கூட்டுறவு சங்கங்களின் ஊழியர்கள், வீட்டுப் பணியாளர்கள், தனிப்பட்ட சாரதிகள் அல்லது 15 நபர்களுக்குக் குறைவாகப் பணிபுரியும் நிறுவனங்களில் தொழில்புரியும் ஒரு தொழிலாளியின் சேவைகள் நிறுத்தப்படுவதற்கு முந்தைய 12 மாத காலப்பகுதியில் ஓய்வூதியத் திட்டத்திற்கு தகுதி பெறுவதில்லை. மேலதிக விவரங்களை கீழுள்ள இணைப்பின் வழியாக பெற்றுக்கொள்ளமுடியும்.
*https://www.pensions.gov.lk/index.php?option=com_content&view=article&id=17&Itemid=149&lang=en#about-foreign-pension-division. The retirement age for employees in the private sector is based on the terms of agreement between the employee and employer.*

தனியார்துறை ஊழியர்களின் கட்டாய இளைப்பாறுதல் வயது ஊழியர் மற்றும் தொழில் தருநர்

ஆகியோருக்கிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்படும் இணக்கப்பாட்டின் நிபந்தனைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

**மீள்திரும்புவோருக்கான வாய்ப்புகள்**
**தகைமை மற்றும் தேவைப்பாடு**: திரும்பி வருவோர் அரச அல்லது தனியார் துறையில் தொழில் வாய்ப்பினை பெறுவதற்கு தகைமை உடையவர்களாயின் திரும்பி வருவோர் ஓய்வு பெற்றபின் ஓய்வூதியம் அல்லது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகியவற்றின் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெறுகின்றனர். இது நாடு திரும்பும் நபர் சம்பந்தப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்கும் பட்சத்தில் மாத்திரமே ஏற்புடையதாகும்.

**பதிவு நடைமுறை:** ஓய்வூதியத் திட்டத்தில் பதிவுசெய்தல் தொழில் தருநரினால் மேற்கொள்ளப்படுகின்றது.

**தேவையான ஆவணங்கள்:** தேவையான ஆவணங்கள் தொடர்பாக தொழில் தருநரினால் ஆலோசனை வழங்கப்படுவதுடன் இலங்கை ஓய்வூதிய திணைக்களத்திடமிருந்தும் அத்தகைய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளமுடியும்.

**பாதிக்கப்படக்கூடிய குழுக்கள்:** கிராமப்புறங்களில் உள்ள சமுதாயங்கள், தினசரி கூலித் தொழிலாளர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகள், நாடு திரும்பிய புலம்பெயர்ந்தோர் மற்றும் வீட்டுப் பணியாளர்களாக புலம்பெயர்ந்து வெளிநாட்டில் குடியேறிய குடும்பங்கள் போன்ற பல பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் இலங்கையில் உள்ளன. இலங்கையில் கிராமப்புறங்களில் வசிக்கும் மற்றும் பணிபுரியும் மக்கள் போக்குவரத்து முறைகளைப் பயன்படுத்தாமல் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதால், சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், போக்குவரத்து, கல்வி மற்றும் சுகாதார வசதிகள் இல்லாததால் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இலங்கை இலவச சுகாதாரப் பாதுகாப்பு முறையைப் பின்பற்றுவதால், அது அனைத்து சமூகங்களுக்கும் அணுகக்கூடியதாக இருப்பதுடன் அவர்கள் அரச அல்லது தனியார் துறையில் ஓய்வூதியம் பெறத் தகுதியான ஒரு தொழிலின் கீழ் பணியமர்த்தப்பட்டிருந்தால் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு உதவி வழங்கும் பல அமைப்புகள் இலங்கையில் உள்ளன. அரசாங்கம் சமூக சேவைகள் திணைக்களத்தை (DSS) நிறுவி, விளிம்புநிலை மற்றும் பின்தங்கிய சமூகங்களைத் தன்னம்பிக்கையுடன் இருக்கச் செய்வதன் மூலம் அவர்களைத் தேசிய அபிவிருத்தியின் தீவிரப் பங்குதாரர்களாக மாற்றியமைத்து அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைத் தீர்க்கின்றது. சமூக சேவைகள் திணைக்களம் சமூக அடிப்படையிலான மறுவாழ்வு திட்டங்களை நடாத்துதல், மாற்றுத்திறனாளிகளுக்கு தொழில் பயிற்சி அளித்தல், குறைபாடுகள் உள்ள பிள்ளைகளின் முன் பிள்ளைப் பருவ வளர்ச்சி மற்றும் மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களின் பராமரிப்பு போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றது. மேலதிக விபரங்களுக்கு, https://www.socialservices.gov.lk/web/index.php?lang=en *என்ற* இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள். சமூக நலனோம்புகை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் மத்திய மாகாணத்தில் உள்ள முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் சிறுவர்களுக்கு உதவி வழங்குகின்றது. புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கை அலுவலகம் பாதிக்கப்படக்கூடிய புலம்பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர்ந்த சமூகங்களுக்கு உதவி வழங்குகின்றது. மேலும், இலங்கையில் உள்ள ஏனைய ஐ.நாடுகளின் முகவர்கள், Humanity & Inclusion, USAID, World Vision, Habitat for Humanity ஆகியவை வாழ்வாதார உதவி, மீள் ஒருங்கிணைப்புக்கான உதவி, உளசமூக உதவி, நிதி உதவி போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு உதவியளிக்கும் முக்கிய நிறுவனங்களாகும்.

**மீள்திருமபுவோருக்கான வாய்ப்புகள்**
**தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள்:** மிகவும் பாதிப்படையும் நிலைக்கு உள்ளாகக் கூடிய வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள திரும்பி வருவோர் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியினை பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறுகின்றனர். சுய முயற்சியில் எழுவதற்கும் சமூகத்தில் மீள ஒருங்கிணைக்கப்படுவதற்கும் ஏதேனும் திறன்களை மேம்படுத்திக் கொள்வதற்கும் ஏதேனும் உதவிகள் தேவையாயின் சமூக சேவைகள் திணைக்களத்தினை தொடர்பு கொள்ள முடியும். சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் தொழில்சார் பயிற்சியை பெற்றுக் கொள்வதற்கு 16 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். பாதிப்படையும் நிலைக்கு உள்ளாகக்கூடிய குழுக்கள் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு, சர்வதேச தொழிலாளர்

அமைப்பு, USAID மற்றும் ஏனைய சில அமைப்புகளினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பல்வேறு கருத்திட்டங்கள் ஊடாக இனங்காணப்பட்டு உதவிகள் வழங்கப்படுகின்றன.

**பதிவு நடைமுறை:** உதவிகளை பெறுவதற்காக திரும்புவோரின் தகுதியை பற்றி அறிந்துகொள்வதற்கு அவர்கள் வசிக்கும் பகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட ‘கிராம அலுவலரை தொடர்பு கொள்ள வேண்டும்.

**தேவையான ஆவணங்கள்:** வசிப்பிடச் சான்று, தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டு

## 5. கல்வி

**கல்வி பற்றிய பொதுவான தகவல்கள்**

ஐந்து வயது முதல் பல்கலைக்கழகம் வரை அனைத்து பிள்ளைகளுக்கும் இலவச கல்வி கிடைக்கும் இலவச கல்வி கொள்கையொன்றை இலங்கை பின்பற்றுகின்றது. இந்நாடு பிரித்தானிய காலனித்துவ நாடாக இருந்தமை நாட்டின் கல்வி முறையின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே, பாடசாலை பரீட்சைகள், பாடவிதானம், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரம் போன்றவை பிரித்தானிய பரீட்சை முறைமைகளுக்கு ஒத்ததொரு நிலையினை வெளிப்படுத்துகின்றது. இலங்கையில் சிறுவர்கள் ஐந்து வயதில் பாடசாலைக் கல்வியை தொடங்குவதுடன் 16 வயது வரை அதற்குள்ளே நிலைத்திருத்தல் கட்டாயமானதாகும். சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகியவை கல்விசார் மொழி மூலமாக செயற்படுகின்றன. கல்வி அமைச்சின் புள்ளி விவரங்களுக்கு அமைவாக இலவசக் கல்வியை வழங்கும் 9931 அரச பாடசாலைகள் உள்ளதுடன் கட்டண அடிப்படையில் செயற்படும் 98 அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளும் உள்ளன. நகர்ப்புற பிரதேசங்களில் அரச பாடசாலைகளில் அனுமதிக்கப்படுவதற்கு பாரியதொரு போட்டி நிலவுவதுடன் இடவசதி தொடர்பான பிரச்சனைகளும் எதிர்நோக்கப்படுகின்றன. ஒப்பீட்டளவில் நோக்குகையில் தனியார் துறை சிறிதாக இருப்பதுடன் அப் பாடசாலைகளில் ஓரளவுக்கு பணபலம் கொண்டவர்களே கல்வி பயில்கின்றனர். கிராமிய பிரதேசங்களில் போதியளவு பாடசாலைகள் இருந்தபோதிலும் வளங்கள் மற்றும் ஏனைய வசதிகள் குறைவாக காணப்படுவதாலும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாலும் பாரிய ஏற்றத்தாழ்வு காணப்படுகின்றது. அவ்வாறான பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசங்களில் காணப்படும் குறைந்த உட்கட்டமைப்பு, சுகாதார மற்றும் துப்பரவேற்பாடு வசதிகள் காரணமாக கிராமிய பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு மிகச் சிறந்த கல்வியை பெற்றுக் கொள்ளும் பொருட்டு போதியளவு ஆசிரியர்களை பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றது. அரச பாடசாலைகளில் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு பகல் நேர பராமரிப்பு வசதிகள் வழங்கப்படுவதில்லை என்பதுடன் இத்தகைய வசதிகளை வழங்கும் தனியார் பாடசாலைகள் உள்ளன.

**கிரயம், கடன் மற்றும் சம்பளம்:**
முதலாம் தரம் முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி இலவசமாக வழங்கப்படுகின்றது. இலங்கையில் அங்கீகரிக்கப்பட்டுள்ள இலவச கல்விக் கொள்கையில் பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைக்கான செலவுகளும் உள்ளடங்குவதுடன் அப்பியாசக் கொப்பிகள், எழுது கருவிகள் போன்ற ஏனைய பாடசாலைக் கல்விக்கான தேவைகளை மாணவர்களே ஏற்பாடு செய்து கொள்ளுதல் வேண்டும். அனேகமான அரச பாடசாலைகளில் ஆரம்பக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வி ஆகிய இரண்டும் வழங்கப்படுவதுடன் பாடநூல்கள் மற்றும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. மேலும் பாதிப்படையும் நிலைக்கு உள்ளாகக் கூடிய சமுதாயங்களை சேர்ந்த மாணவர்களுக்கு உதவி வழங்கும் பொருட்டு சலுகை அடிப்படையில் போக்குவரத்து மற்றும் சுகாதார சேவைகள் போன்ற ஏனைய நலன்புரி சேவைகளும் வழங்கப்படுகின்றன. 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் கல்வி அமைச்சினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு உயர் மட்டத்திலான புள்ளிகளைப் பெற்று சித்தியடையும் மாணவர்களுக்கு வசதிகளையும் வளங்களையும் கொண்ட ஒப்பீட்டளவில் மிகச்

சிறந்ததென கருதப்படுகின்ற நகர்புற அரச பாடசாலைகளுக்கு நுழைவதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் சிறந்த முறையில் சித்தியடைகின்ற மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கப்படுகின்ற அரச பல்கலைக்கழகங்களுக்குள் நுழைவதற்கு வாய்ப்பு கிட்டுகின்றது. குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு பல்கலைக்கழக உதவிப்பணம் வழங்கப்படுகின்றது. தனியார்துறை பல்கலைக்கழகங்களில் கல்வி பெறும் மாணவர்கள் கல்விக்கான கட்டணத்தை செலுத்த வேண்டும் என்பதுடன் சில மாணவர்களுக்கு அவர்களின் கல்வி அடைவின் அடிப்படையில் புலமைப்பரிசில் அல்லது குறைந்த கட்டணத்தை செலுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. இலங்கையில் மாணவர்களுக்கு உயர்கல்வி வசதிகளை வழங்கும் பொருட்டு பல வங்கிகளினால் பல்வேறு கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**வெளிநாட்டு டிப்ளோமா தொடர்பான சரிபார்த்தல் மற்றும் அங்கீகாரம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அங்கீகாரக் கடிதத்தின் அடிப்படையில் வெளிநாட்டு பட்டங்கள்/ டிப்ளோமாக்கள் மற்றும் வெளிநாடுகளில் பெறப்பட்ட சான்றிதழ்களின் சரிபார்ப்பு மற்றும் அங்கீகாரம் இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக இத்தகைய சரிபார்ப்புக்கான கோரிக்கைகள் இணையவழி ஊடாக மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அங்கீகார கடிதம் இணையவழி முறையிலும் வழங்கப்படுகின்றது. விண்ணப்பப்படிவத்தை இணையத்தளம் ஊடாக பெற்றுக்கொள்ளமுடியும் என்பதுடன் அதற்கான கட்டணத்தை இணையவழி ஊடாக மேற்கொள்ள முடியும். இல்லையெனில், தேவையான ஆவணங்களுடன் வேண்டுகோள் கடிதத்தை recog@ugc.ac.lk இற்கு மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைக்க முடியும். வெளிநாட்டு பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்டங்கள் / டிப்ளோமாக்களுக்கான அங்கீகாரத்திற்காக ஒரு சான்றிதழுக்கு ரூ.2500/- அறவிடப்படுவதுடன் வேறு ஏதேனும் தகுதிக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு ஒரு சான்றிதழுக்கு ரூ.2000/- அறவிடப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து *https://www.ugc.ac.lk/index.php?option=com_content&view=article&id=1741%3Apayment-gateway&catid=144%3Apayment-gateway&Itemid=92&lang=en* என்ற இணைப்பை பார்க்க.

**மீள்திரும்புவோருக்கான வாய்ப்பு**

**தகைமைகள் மற்றும் தேவைப்பாடுகள்:** திரும்பி வருவோர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு எந்தவொரு அரச அல்லது தனியார் பாடசாலைக்கும் அனுமதியைப் பெற்றுக் கொள்ளலாம். அரச பாடசாலையில் சேர்வதற்கு தீர்மானிக்கும் பட்சத்தில் இலவசமாக கல்வியை பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு கிட்டும். தரம் 5 புலமை பரிசில் பரீட்சை அல்லது கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டு சித்தியடைந்தால் அதிக வசதிகளையும் வளங்களையும் கொண்ட ஒரு சிறந்த அரச பாடசாலைக்கு செல்வதற்கான வாய்ப்பு கிட்டும். இதற்கு மேலதிகமாக க.பொ.த (உ/தரம்) பரிட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைந்தால் அரச பல்கலைக்கழகத்திற்கு நுழைவதற்கான வாய்ப்பும் கிட்டும். அவர்களுக்கு விருப்பமும் போதியளவு நிதி வசதியும் உள்ளதாயின் தனியார் பாடசாலையிலும் கல்வி கற்கலாம்.

**பதிவு நடைமுறை:** திரும்பி வருவோர் பதிவு செய்து கொள்வதற்கு / நுழைவினை பெறுவதற்கு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிகாரிகளை அல்லது தனியார் பல்கலைக்கழகங்களை தொடர்பு கொள்ளலாம்.

**தேவையான ஆவணங்கள்:** செல்லுபடியாகும் அடையாள ஆவணத்தின் ஒரு பிரதி (தேசிய அடையாள அட்டை / கடவுச்சீட்டு) கிராம அலுவலரினால் வழங்கப்படும் சான்றிதழ், கல்வித் தகைமைகளுக்கு ஏதுவான சான்றிதழ்கள், கல்வி அமைச்சிலிருந்து பெறப்பட்ட சமான சான்றிதழ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரக் கடிதம்

## **6.** சிறுவர்கள்

**சிறுவர்கள் மற்றும் குழந்தைகளின் பொதுவான நிலை:**

கடந்த ஆண்டுகளில், சிறுவர்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்துவதில் இலங்கை கணிசமான முன்னேற்றம் கண்டுள்ளதுடன், நீண்டகால யுத்தம், இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அரசியல் முரண்பாடுகளின் பாதிப்புகள் இருந்தபோதிலும், சிறுவர்களின் நிலைமையை மேம்படுத்துவதில் நாடு சிறப்பாகச் செயற்பட்டுள்ளது. பல குடும்பங்களுக்கு கடுமையான வறுமை நிலையிருந்து மீள்வதற்கு ஆற்றல் கிடைத்துள்ளதுடன் ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களின் மரண வீதத்தை குறைப்பதற்கும், சரியான ஊட்டச்சத்து மற்றும் மகப்பேற்றுக்கு முந்தைய பராமரிப்புக்கான வாய்ப்பினை மேம்படுத்துவதற்கும், நீர் மற்றும் சுகாதார வசதிகளின் தரம் மற்றும் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களுக்கு இலவசக் கல்வியை வழங்குவதற்கும் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் வழங்கப்படும் இலவச சுகாதாரத்தின் கீழ் பெரும்பாலான சிறுவர்கள் பயனடைந்துள்ளனர். எவ்வாறாயினும், குறிப்பாக வடக்கு, கிழக்கு, மலைநாடு மற்றும் கிராமப்புறங்களில் தற்போதும் வறுமை மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. குழந்தைகள் மற்றும் ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களின் மரணம், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை சார்ந்த சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்வதில் காணப்படும் சமமற்ற தன்மை போன்ற சவால்களை எதிர்கொள்ளும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் உள்ளன. இலங்கையானது 1992 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையை (CRC) அங்கீகரித்துள்ளது. அதன் பின்னர் அரசாங்கம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் ஆகியவை சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்டன. சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒரு முறை சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை பற்றிய குழுவிற்கு இலங்கை அறிக்கை செய்கிறது. சிறுவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு பல நோய்த்தடுப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

**சிறுவர்களின் நல்வாழ்வு மற்றும் உரிமைகள் தொடர்பாக செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்கள்:**
சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு பணியாற்றும் சேவ் தி சில்ரன், சைல்ட் ஆக்ஷன் லங்கா, *PEaCE/ECPAT Sri Lanka* , பிரண்ட்ஸ் லங்கா சைல்ட் பவுண்டே'ன் மற்றும் லீட்ஸ் போன்ற (*Save the Children, Child Action Lanka, PEaCE/ECPAT Sri Lanka, Friends Lanka Child Foundation and LEADS)* பல அரச சார்பற்ற நிறுவனங்கள் நாட்டில் உள்ளன. மேலும், UNICEF பல நிகழ்ச்சிகளை நடாத்துவதுடன், இலங்கையில் சிறுவர்களின் முன்னேற்றத்திற்காகவும் சிறந்த எதிர்காலத்திற்காகவும் முன்முயற்சிகளை மேற்கொள்கிறது. இந்த அமைப்புகளின் நோக்கம் சிறுவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கை, கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு மற்றும் தீங்கிலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றை ஏற்படுத்துவதாகும். சிறுவர்களின் நல்வாழ்வு, மேம்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கான ஒரு உகந்த சூழலை உருவாக்குவதில் அவர்கள் உறுதிபூண்டுள்ளனர்.

**மீளதிரும்புவோருக்கான வாய்ப்புகள்**
**தகைமை மற்றும் தேவைப்பாடுகள்:** சிறுவர்கள் திரும்பி வரும்போது அவர்களின் சர்வதேச பிறப்புச் சான்றிதழ், தடுப்பூசி பதிவுகள், கல்வி சான்றிதழ்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்தும் மருந்துகளின் விபரங்கள் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும். சிறுவர்களை பாடசாலையில் சேர்ப்பதற்கு தேவைப்படும் போது மேற்படி ஆவணங்கள் கோரப்படலாம்.

**பதிவு நடைமுறை**: கல்வி அமைச்சினால் அரச பாடசாலைகளில் தரம் 01 இற்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான கால வரம்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விபரங்கள் கல்வி அமைச்சின் இணையத்தளமான *https://moe.gov.lk/* மற்றும் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்படுகின்றது. தரம் 2 அல்லது தரம் 6 போன்ற கல்வி செயல்முறையின் இடைப்பட்ட காலத்தில் மாணவர்களை அரச பாடசாலையில் அனுமதித்தல் தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலை அதிகாரிகளை தொடர்புகொண்டு ஏற்பாடுகளை செய்துகொள்ளுதல் வேண்டும்.

**தேவையான ஆவணங்கள்:** வெளிநாட்டில் தங்கியிருந்த காலத்தை உறுதிப்படுத்துதல், வெளிநாட்டில் தங்கியதற்கான காரணங்கள், பெற்றோரின் வாக்காளர் பட்டியல், பிறப்புச் சான்றிதழ், வசிக்கும் இடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் சான்றிதழ், முந்தைய கல்விச் சான்றிதழ்கள்

## 7. தொடர்புகள்

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கை அலுவலகம் - ஐ.நா புலம்பெயர்வு
IBSL கட்டிடம், 9ஆம் மாடி
இல 80A, எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு 08
இலங்கை
0115 325 300
iomcolombo@iom.int
https://srilanka.iom.int/

கயனி மீகமுகே
0774410371
gmeegamuge@iom.int\

*சுரேஷ் திவ்வியன்*
0776593832
tsuresh@iom.int

சுகாதார அமைச்சு – இலங்கை
ஒட்டுமொத்த சுகாதார சேவைகள் முறைமையையும் நிர்வகிக்கின்றது
சுவசிரிபாய
இலக்கம் 385,
வண. பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை
கொழும்பு 10
0112 694 033/ 0112 675280
postmaster@health.gov.lk
http://www.health.gov.lk/moh_final/english/

சுகாதார மேம்பாட்டு பணியகம்
சுகாதாரக் கல்வி, சுகாதார மேம்பாடு மற்றும் சுகாதாரத் தகவல்களை பிரசித்தப்படுத்துதல் ஆகியவற்றின் ஊடாக சமுதாய்களை வலுவூட்டுதல் மற்றும் அணிதிரட்டுதல்
இல. 02 கின்சி வீதி
கொழும்பு 01
0112 696 606
healthpromo@sltnet.lk
https://www.hpb.health.gov.lk/en#suwasariyaCall

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்
வெளிநாட்டு தொழில் சந்தைகளில் திறன்களிலிருந்து பயனடையும் பொருட்டு வினைத்திறன்மிக்க மற்றும் சமமான வழிமுறைகளை உருவாக்குதல்
தலைமை அலுவலகம் - எண் 234
டென்சில் கொப்பேகடுவ மாவத்தை
கொஸ்வத்தை, பத்தரமுல்லை
0112 879900-02 Hotline - 1989
Infor_center@slbfe.lk
http://www.slbfe.lk/

இலங்கை தொழில் வழிகாட்டல் நிறுவனம்
இலங்கையில் இளைஞர்களுக்கான தொழில் வழிகாட்டல் சேவைகளை வழங்குதல்
தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வளாகம்
ஹைலெவல் வீதி
மஹரகமை
+94 011 2333467
http://slicg.gov.lk/slicg/

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
சமூகங்களில் பின்தங்கிய மக்களை மேம்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்குதல்
4வது மாடி, செத்சிறிபாய
பத்தரமுல்ல
0112 887722
திரு. சேனக உபேசிங்க (தகவல்.்.ஊடக அதிகாரி)
Senaka.ubesinghe@gmail.com
https://www.samurdhi.gov.lk/web/index.php/en/home.html

இலங்கை கல்வி அமைச்சு
நாட்டின் முழு கல்வி முறைமையையும் நிர்வகிக்கிறது
இசுருபாய, பத்தரமுல்ல
பன்னிபிட்டிய வீதி
பத்தரமுல்ல 10120
0112 785 141
info@moe.gov.lk
https://moe.gov.lk/

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை
நாட்டில் வீடமைப்பு பிரச்சினைகளை எதிர்கொள்ளும் சமுதாயங்களுக்கு உதவுதல்
சேர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை
த.பெ.இலக்கம் 1826
கொழும்பு 02
011 2431932
info@nhda.lk
**www.nhda.lk**

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
பயிற்சி நிலையம்
971, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே
0112 888 782
info@naita.gov.lk
http://www.naita.gov.lk/

இலங்கையின் தொழிற்பயிற்சி அதிகாரசபை
பயிற்சி நிலையம்
4 ஆம் மாடி, நிபுணத்தா பியச
354/2,எல்விட்டிகல மாவத்தை
கொழும்பு
0112 352 190
cgjp@vtasl.gov.lk
https://www.vtasl.gov.lk/

**ஒரே பார்வையில்**

## மீள்திரும்புவதற்கு முன்னர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:

**சுகாதாரம்:** ஒவ்வொருவரும் தங்களது தடுப்பூசி பதிவேடுகளை கொண்டு வரவேண்டும் என்பதுடன், அது ஆங்கிலத்தில் இல்லையென்றால் மொழிபெயர்க்கப்பட்டு உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். திரும்புவோர் ஏதேனும் மருந்து அல்லது சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தால், மருத்துவரிடம் இருந்து அனைத்து மருத்துவ அறிக்கைகளையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துப் பொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுவதால், இலங்கையில் மருந்துகள் மற்றும் சிகிச்சைகள் கிடைக்கின்றனவா என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். சுகாதார அமைச்சினால் பயணிகளுக்கு அவ்வப்போது திருத்தப்பட்டவாறான கொவிட்-19 வழிகாட்டுதல்களை வெளியிடப்படுகின்றது. தயவு செய்து நீங்கள் இலங்கைக்குச் செல்வதற்கு முன், உங்களிடம் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**கல்வி:** பட்டங்கள்/டிப்ளோமாக்கள் மற்றும் ஏதேனும் பிற கல்வித் தகைமைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் சான்றளிக்கப்பட்டிருக்க வேண்டும். கல்வித் தகைமைகள் அங்கீகாரத்திற்காக வேண்டுகோள் கடிதத்துடன் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

**அடையாள உறுதிப்படுத்தல் ஆவணங்கள்**: பயண ஆவணம் செல்லுபடியாகும் நிலையில் உள்ளதென்பதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில், மேலதிக ஆலோசனைக்கு அருகில் உள்ள இலங்கை தூதரகத்தை தொடர்பு கொள்ளவும். கடவுச் சீட்டு மற்றும் தேசிய அடையாள அட்டை உள்ளதாயின் அவற்றை கொண்டு வாருங்கள். இலங்கைத் தூதரகத்தால் சட்டப்பூர்வமாக்கப்பட்ட சான்றளிக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழைப் பெற்று, நாட்டிற்கு வெளியே பிறந்த குழந்தைகளின் குடியுரிமையைப் பிறந்து ஒரு வருடத்திற்குள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் பதிவு செய்தல் வேண்டும். பதிவு செய்யத் தவறினால் மேலதிக கட்டணம் அறவிடப்படும்.

**குடும்பம் மற்றும் நண்பர்கள்:** உடனடி குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் வருகையைப் பற்றித் தெரிவிக்கப்படுவதை உறுதிசெய்து கொள்ளுங்கள், இதன் மூலம் சுமூகமாக திரும்புவதற்கு தேவையான உதவியும் ஒருங்கிணைப்பும் கிடைக்கலாம்.

**போக்குவரத்து**: வாடகை வண்டியை முன்பதிவு செய்வதற்காக, வசிக்கும் இடத்திற்கு செல்வதற்கு முன்கூட்டியே போக்குவரத்தை ஒருங்கிணைக்கவும். நீங்கள் செல்லும் வழியில் போக்குவரத்து மற்றும் சிற்றுண்டிகளுக்கு பணம் செலுத்த இலங்கை ரூபாய் உங்களிடம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**வேலைவாய்ப்பு:** நீங்கள் சென்றிருந்த நாட்டில் பணிபுரிந்திருந்தால் அல்லது ஏதேனும் பயிற்சி அல்லது பயிலுனராக அனுபவம் பெற்றிருந்தால், அனுபவத்தை உறுதிப்படுத்தும் கடிதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**தங்குமிடம்:** இலங்கையில் தங்குமிட வசதிகள் பற்றிய தகவல்கள் அடங்கிய இணையத்தளத்திற்கு பிரவேசித்து இலங்கையில் தங்குமிட வசதிகள் பற்றிய ஒரு புரிதலை பெற்றுக்கொள்ளுங்கள். குடும்பத்தினர் அல்லது நண்பர்களின் உதவியுடன் இலங்கையில் தற்காலிக தங்குமிடத்தை முன்கூட்டியே ஏற்பாடு செய்துகொள்ளுங்கள்.

**திட்டமிடல்:** தற்போதைய பொருளாதாரம் மற்றும் சமூக சூழல்கள், கிடைக்கக்கூடிய வேலை வாய்ப்புகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கு இலங்கையைப் பற்றி ஒரு சுருக்கமான ஆய்வினை செய்யுங்கள்.

## வருகை தந்த பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்:

அடையாள ஆவணங்கள்: உங்களிடம் தேசிய அடையாள அட்டை (NIC) இல்லையென்றால், அதனை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்து சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் பதிவு செய்துகொள்ளுங்கள்.

**வங்கிக் கணக்கு**: இலங்கையில் உங்களுக்கு விருப்பமான வங்கியில் வங்கிக் கணக்கைத் திறக்கவும். இதற்கு உங்கள் தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு தேவைப்படும்.

**மீளிணைப்பு**: மீளிணைவுக்கான உதவியைப் பெறுவதற்கு உங்களுக்கு தகைமை இருந்தால் நீங்கள் வருகை தந்த உடனேயே அதற்காக வழங்கப்பட்டுள்ள காலத்திற்குள் இலங்கையில் சம்பந்தப்பட்ட புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் (IOM) அலுவலகத்தை தொடர்புகொள்ளுங்கள். நீங்கள் அலுவலகத்திற்கு வருகைத் தருவதற்கு முன்னர் அலுவலகத்தை தொடர்புகொண்டு நேரத்தை ஒதுக்கிக்கொள்ளுங்கள்.